மறைந்த கருமுத்து கண்ணன்

மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற மனிதநேயப் பண்பாளர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, மே 24-

மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட் டுள்ளார். அதில் 'மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற மனித நேயப் பண் பாளர் கருமுத்து கண்ணன் அவர்கள்' என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் அவர்கள் மறைவையொட்டி தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வரு மாறு:-

மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயிலின் தக்கார் கருமுத்து கண் ணன் அவர்கள் மறைந்த செய்தியால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந் தேன். அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது தந்தை காலத்தில் இருந்தே கழகத்தின் மீதும் எங்கள் குடும்பத்தின் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்த அவர். நான் எப்போது மதுரை சென்றா லும் பாசத்தோடும் இன்முகத்தோடும் வரவேற்பார். தியாகராசர் பொறியியல் கல்லூரி இயக்குநராகப் பொறுப்பு வகித் துப் பல ஏழை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவி செய்த மனி தநேயப் பண்பாளர்.

2006இல் கழக ஆட்சி அமைந்த தும் மதுரை மீனாட்சி அம்மன் கோயி லின் அறங்காவலர்க் குழுத் தலைவ ராக கருமுத்து கண்ணன் அவர்கள் நியமிக்கப்பட்டார். மதுரை மீனாட்சி யம்மன் கோயிலின் தக்காராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, கோயில் புன ரமைப்புப் பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டு மதுரை மக்களின் மன தில் நீங்கா இடம் பிடித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க ளால் மாநில திட்டக்குழுவின் உறுப்பி னராக நியமிக்கப்பட்டு மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் உருவாக்குவதில் துணை நின்றவர். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற வுடன் எனது தலைமையில் அமைக் கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறை உயர்நிலை ஆலோசனைக் குழுவிலும் உறுப்பினராக இருந்து இந்து சமய அறநிலையத்துறைக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியவர்.

தொழில்துறை, கல்வித்துறை, கோயில் திருப்பணிகள் என அனைத்தி லும் சிறந்து விளங்கி, பலருக்கும் உத விகள் செய்த உயர்ந்த உள்ளம் கொண்ட கருமுத்து கண்ணன் அவர்க ளின் மறைவு பேரிழப்பு. அவரது மறை வினால் வாடும் அவர்தம் குடும்பத்தா ருக்கும், அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் தக்கார் கருமுத்து தி.கண்ணன் அவர்கள் மறைவினையொட்டி அன்னாரின் உடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஐ.மகிழன், மாநகர் மாவட்ட நிர்வாகி சின்னம்மாள் மற்றும் பலர் உள்ளனர்.

எஸ்.ரமேஷ்ராஜ்-சங்கர் கணேஷ்-ஆர்.தியாகராஜன் பங்கேற்பு!

மதுரவாயல் தெற்கு- இளைஞர் அணி சார்பில் தெருமுனைக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன்-யாழினி-க.கணபதி-ஏ.எம்.வி.பிரபாகர ராஜா சிறப்புரை!

சென்னை, மே 24-

சென்னை தெற்கு மாவட் டம், மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞரணி சார்பில் தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டுகளின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் 148-வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.தியாகராஜன் ஏற்பாட்டில் இன்று (24.05.23, புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு மேட்டுக் குப்பம் ஜெயராம் நகர் முதல் பிரதான சாலையில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் தலைமையி லும், 148-வது வட்டக் கழக செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் முன்னிலையில் நடைபெறுகி றது.

இந்த நிகழ்ச்சியில் தலை மைக் கழக பேச்சாளரும், சமூக வலைத்தள பொறுப்பாளரு மான மகளிர் அணி திருமதி யாழினி, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவா யல் சட்டமன்ற உறுப்பினரும், பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட இளைஞரணி அ மை ப் பா ள ரு ம், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.வி.பிர பாகரராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின் றனர்.

இந்நிகழ்ச்சியில் மதுரவா யல் வடக்குப் பகுதி கழகச் செயலாளரும், மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன், தலைமை செயற் குழு உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வி.ராஜேஷ், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ். பாரதி எம்.சி., கே.ராஜி எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ் எம்.சி., ஹேம லதா கணபதி எம்.சி., சந்திரா ராமலிங்கம் எம்.சி. வட்ட கழக செயலாளர்கள்

த.ரமேஷ், சி.சுந்தர், ஆ.மோசஸ், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ் ஆர். ராதா செல்வம் மற்றும் பகுதி இளைஞரணி துணை அமைப் பாளர்கள் இரா.பா.உதயகு மார், டி.ராஜேஷ்,செ.ரவி மு. மகேஷ்குமார் மற்றும் 148வது வட்ட கழக நிர்வாகிகள் கலந் துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இறுதியில் எஸ்.ஹரிஹரன் எம்.என்.எம்.பிரதாப் ஜெ.அஸ் வத் ஆகியோர் நன்றியுரை ஆற் றுகின்றனர்.

முன்னிலை எஸ்.ரமேஷ் ராஜ், தலைமை ச.சங்கர் கணேஷ் நிகழ்ச்சி ஏற்பாடு ஆர். தியாகராஜன்.

நாடாளுமன்ற கட்டிடம் திறப்பு: பா.ஜ.க. ஆட்சியில்

அனைத்து மரபுகளும் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன!

'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

புதுடெல்லி, மே 24 -

நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவில் குடியரசுத் தலைவர் புறக் கணிக்கப்பட் டுள்ளார். பா.ஜ.க. ஆட் சியில் அனைத்து மரபுகளும் காலில் போட்டு மிதிக்கப்படு கின் றன என 'தீக்கதிர்' தலையங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 23.5.2023 தேதிய 'தீக்கதிர்' நாளேடு தலையங் கத்தில் கூறப் பட்டுள்ளதாவது:-

புதுதில்லியில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற கட்டடத்தை வரும் மே 28ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தி யுள்ளது.

முதலாவதாக கட்டடத்தை திறந்து வைக்க ஒன்றிய அரசு தேர்வு செய்துள்ள தேதி என்பது மகாத்மா காந்தி படுகொலையில் குற்றம் சாட்டப் பட்டவரும். இந்துத் துவா கருத்தியலின் மூலவர்களில் ஒருவருமான சாவர்க்கர் பிறந்தநாள் ஆகும்.

சாவர்க்கர் தன்னுடைய வாழ் நாள் முழுவதையும் வெறுப்பு அரசி யலை விதைப்பதற்காக பயன்படுத் தியவர். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த போது மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத் துவிட்டு விடுதலையானவர்.

தீக்கதிர்

2023 மே 23 செவ்வாய்க்கிழமை

நாடாளுமன்ற கட்டட திறப்பு விழா சர்ச்சைகள்

புதுதில்லியில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற கட்டடத்தை வரும் மே 28ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

முதலாவதாக கட்டடத்தை திறந்து வைக்க ஒன்றிய அரசு தேர்வு செய்துள்ள தேதி என்பது மகாத்மா காந்தி படுகொலையில் குற்றம் சாட்டப் பட்டவரும். இந்துத்துவா கருத்தியலின் மூலவர்களில் ஒருவருமான சாவர்க்கர் பிறந்தநாள் ஆகும்.

மகாத்மா காந்தியை கொன்ற நாது ராம் விநாயக் கோட்சேயின் குருநா தர். இவருடைய பிறந்த நாளில் நாடாளுமன்றக் கட்டடத்தை திறந்து வைக்க வேண்டிய அவசியம் என்ன?

இந்திய விடுதலைப் போராட் டத்தோடு தொடர்புடைய பல நாட் கள் உண்டு. இந்திய அரசியல் சாசன உருவாக்கத்தில் தொடர்பு டைய எத்தனையோ நாட்கள் உண்டு. ஆனால் மதச்சார்பற்ற இந் திய அரசியல் சாசனத்தையே ஏற் றுக் கொள்ளாத ஒருவரது பிறந்த நாளில் நாடாளுமன்ற புதிய கட்ட டத்தை திறந்து வைக்க வேண்டிய அவசியம் என்ன? இது மகாத்மா காந்தியையும், இந்திய விடுதலைப் போராட்டத்தையும். இந்திய அரசி யல் சாசனத்தை உருவாக்கியவர்க ளையும் ஒருசேர அவமதிக்கும் செயல் அல்லவா? என்ற கேள்விக்கு ஒன்றிய அரசு பதில் சொல்ல மறுக்கி றது.

65 ஆயிரம் சதுரமீட்டர் பரப்பள வில் சென்டரல் விஸ்டா என்ற பெய ரில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பில் இந்த புதிய கட்டடம் உருவாக்கப்பட் டுள்ளது. இந்த கட்டடத்தில் வைக்கப் பட்ட புதிய சிங்கங் களின் சின்னம் மூர்க்க த்தனமா கவும். கொடூரமாக வும் அமைக்கப்பட்டுள்ளதாக விமர் சனம் எழுந்தது. இது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் வழக்கு கூட தொடரப்பட்டது. சார நாத் அருங் காட்சியகத்தில் உள்ள அரசு சின் னத் திற்கு மாறாக இந்த சிலை அமைந்துள்ளதாகவும் கூறப்பட்டது. எனினும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

குடியரசுத் தலைவரை புறக்க ணித்துவிட்டு புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை பிரதமர் நரேந் திர மோடி திறந்து வைப்பதும் சர்ச் சைக்கு உள் ளாகியுள்ளது.

இந்த கட்டடத்தின் அடிக்கல் நாட் டுவிழாவின் போது அப்போதைய ஜனாதி பதி ராம்நாத் கோவிந்த் புறக் கணிக்கப்பட்டார். இப்போது திறப்பு விழாவின் போது ஜனாதிபதி திரௌ பதிமுர்முபுறக்கணிக்கப்பட்டுள்ளார். நியாயமாக அரசியல் சாசன தலை வரான ஜனாதிபதிதான் நாடாளு மன்ற கட்டடத்தை திறந்து வைக்க அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் அனைத்து மரபுகளும் காலில் போட்டு மிதிக்க ப்படுகின்றன. இப் போதும் அதுதான் நடக்கிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகர இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் திருத்தணியை அடுத்த காந்தி நகர் பகுதியில் நகர இளைஞரணி அமைப்பாளர் திருத்தணி ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெற்றது, இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, தலைமை கழக பேச்சாளர் போடி காமராஜ் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களிடத்தில் இரண்டு ஆண்டு சாதனைகளை குறித்து சிறப்புரையற்றினார். இதில் மாவட்ட துணை செயாலாளர் மிதுனன் சக்கரவர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.எம்.சுகுமார், ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்

ஆலந்தூரில் திமுக இளைஞரணி சார்பில்

2 ஆண்டு சாதனை விளக்க கூட்டம்!

ஆலந்தூர், மே, 25

ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பாக திராவிட மாடல் அரசின் 2ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஆலந்தூர் தர்மராஜா கோவில் தெரு வில் நடந்தது. கூட்டத்திற்கு ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக இளைஞரணி அமைப் பாளர் கோ.பிரவீன் குமார் தலைமை வகித்தார்.பகுதி செயலாளர் பி.குணாளன் மண்டலக் குழு தலைவர் என்.சந்திரன் பகுதி மாணவ ரணி அமைப்பாளர் வெ.பிர காஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மாவட்ட் இளை ஞரணி துணை அமைப்பா ளர் கோல்டு பிரகாஷ் வர வேற்றார் இந்த கூட்டத்தில் திமுக அமைப்பு செயலாளர ஆர்.எஸ்.பாரதி, தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் எஸ்.பத்மபிரியா ஆகியோர் சிறப்புரை ஆற்றி னர்.

இந்தக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் ஆர். டி.பூபாலன், கீதாஆனந்தன், இரா.பாஸ்கரன், மாவட்ட மாண வரணி அமைப்பாளர் டாக் டர் பிரபு, கலாநிதி குணா ளன், கீர்த்திராஜ், அபுதாஹிர், மற்றும் கவுன்சிலர்கள் பிருந் தாஸ்ரீ, முன்னாள் கவுன்சிலர் பாபுகுமார், வட்ட செயலா ளர்கள் கே.பி. முரளிகிருஷ்ணன், கே.ஆர். ஜெகதீஸ்வரன், எம்.ஆர் சீனி வாசன், கருணாநிதி, மணப் பாக்கம் ரவி, மற்றும் வி. ராஜா சகிம்ஷா, ரூபன். விமலா. ஸ்ரீதர் இகார்த்திக் எஸ்.காஜாமொய்தீன். தீபக் தீனதயாளன். கிரண் புரூஸ், வாசிம்,உதயா .இளைஞரணி நிர்வாகிகள், விக்கி, சந் தோஷ், ஜாகீர்ராஜேஷ், விஜி, உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்தில், நேற்று (23.05.2023) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி தலைமையில் மாவட்ட அளவிலான அனைத்து துணை ஆணையர்கள் (கலால்) மற்றும் உதவி ஆணையர்களுடனான (கலால்) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக்கூட்டத்தில் உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் முனைவர் எம்.மதிவாணன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கி

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தெருமுனை கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தெருமுனை கூட்டம் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் விவரம்:

நாள் : இன்று (24.05.2023) / நேரம் : மாலை 5 மணியளவில்

பகுதி	தலைமை	பேச்சாளர்கள்	இடம்
பூவிருந்தவல்லி	டி.தேசிங்கு	அமுதரசன்	கொரட்டூர்
மேற்கு ஒன்றியம் திருநின்றவூர் நகரம்	தி.வை.இரவி	மதிமாறன்	22 வது வார்டு
திருவேற்காடு நகரம்	என்.இ.கே.மூர்த்தி	மதிமாறன்	15வது வார்டு மாதிரவேடு
பூவிருந்தவல்லி நகரம்	ஜி.ஆர்.திருமலை	திருவெற்றியூர் கருணாநிதி	12வது வார்டு புது தெரு
திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம்	சே.பிரேம் ஆனந்த்	தாயகம் கவி	25 வேப்பம்பட்டு ரயில் நிலயம்
எல்லாபுரம் மத்திய ஒன்றியம்	தங்கம் முரளி	தாயகம் கவி	ஆயிலசேரி

எனவே மேற்குறிப்பிட்டுள்ள தெருமுனை கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி. ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த பகுதி. ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். இக்கூட்டங்களில் அந்தந்த பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், இளைஞர் அணி. மாணவர் அணி. மாளிர்அணிமற்றும்அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும். தகவல் தந்து அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக செய்து நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆவடி சா.மு.நாசர்,
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் சி.மகேஷ்குமார் அறிவிப்பு!

சென்னை, மே 24 -

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (24.5.2023 புதன்கிழமை) மாலை 4 மணி அளவில், எண்.106, ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஓட்டேரி எனும் முகவரியில் அமைந் துள்ள ஜி.பி.மினி ஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச் சருமான பி.கே.சேகர்பாபு பங்கேற்று ஆலோசனை வழங் குகிறார்.

இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கள், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவ ரும் தவறாமல் பங்கேற்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணி கள்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பா ளர் சி.மகேஷ் குமார் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாட்டம்!

நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள்!

முன்னேற்ற சங்க செயலாளர் ந.சண்முகசுந்தரம் அறிவிப்பு!

சென்னை, மே 24-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப் பாக நடத்துவது மற்றும் தமிழ் நாடு நகர்ப்புர வாழ்விட மேம் பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் (தொ.மு.ச) சார்பில் நினைவுப் பரிசு வழங் குவது என கூட்டத்தில் தீர்மா னம் இயற்றப்பட்டது என்று மாநில பொது செயலாளர் ந.சண்முகசுந்தரம் தெரிவித் துள்ளார்.

நகர்ப்புர வாழ்விட மேம் பாட்டு வாரிய ஊழியர் முன் னேற்ற சங்கத்தலைவர் பி.எஸ். ரவிசந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்தின் படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அலுவலகங்களின் ஜூன் 3 அன்று தமிழின தலைவர் கலை ஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை கோட்ட அலுவல கங்கள், எஸ்டேட் அலுவலகங் களில் வைத்து ஊழியர்கள் அனைவரும் மாலை அணி வித்து மலர் தூவி மரியாதை செய்திட தீர்மானம் இயற்றப் பட்டது.

தலைமை அலுவலகம் மற் றும் மதுரை கோட்ட அலுவல கத்தில் உள்ள கொடிக்கம்பங் களை புதுப்பித்து தொ.மு.ச. கொடியேற்றி இனிப்பு வழங்கு வது எனவும் தீர்மானம் இயற் றப்பட்டது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கண்ட முத்தமிழறிஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு ஊழியர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குவதென தீர்மானம் இயற்றப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மயிலை நா. சம்பந்தன்
மே 24 (1998)

சென்னை மாவட்டம், மயிலைப் பகுதிக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் – மண்டலக்குழுத் தலைவர் மற்றும் மயிலை இந்து சாசுவத நிதி நிறுவனத்தில் இயக்குநராக மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மிசா சட்டத்தின்கீழ் சிறைவாசம் – இந்தி எதிர்ப்பு – இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.